This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

முழு ஆண்டு கையேடு

## 6 ஆம் வகுப்பு

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூல் 2020ன்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளுக்கும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று பருவங்களுக்குரிய அலகு தேர்வு வினாத்தாள்கள்– விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
- முதல் பருவம், இரண்டாம் பருவம், மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு 2018–19 வினாக்கள் (※) சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- முதல் பருவம் மற்றும் இரண்டாம் பருவ தொகுத்தறி தேர்வு – 2019–20, மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு – 2019 வினாத்தாள்கள் – விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com
Ph : 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

**2021-22 புதிய பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

ISBN : **978-81-8449-704-5**
**குறியீட்டு எண் : FY-6-T**

**எழுதி வழங்கியவர்**
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது
பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040.
☎ 044-4862 9977, 044-486 27755
81242 01000/ 81243 01000
**e-mail :** orders @surabooks.com
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

## பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 6ஆம் வகுப்பு - தமிழ் உரைநூல் - முழு ஆண்டு பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 6ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

– பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# முதல் பருவம்

## பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| | மனப்பாடச் செய்யுள் (மூன்று பருவம்) | | | 1-4 |
| 1. | மொழி **தமிழ்த்தேன்** | கவிதைப் பேழை | இன்பத்தமிழ் | 7-34 |
| | | | தமிழ்க்கும்மி | |
| | | உரைநடை உலகம் | வளர்தமிழ் | |
| | | விரிவானம் | கனவு பலித்தது | |
| | | கற்கண்டு | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | |
| 2. | இயற்கை **இயற்கை இன்பம்** | கவிதைப் பேழை | சிலப்பதிகாரம் | 35-64 |
| | | | காணி நிலம் | |
| | | உரைநடை உலகம் | சிறகின் ஓசை | |
| | | விரிவானம் | கிழவனும் கடலும் | |
| | | கற்கண்டு | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் **எந்திர உலகம்** | கவிதைப் பேழை | அறிவியல் ஆத்திசூடி | 65-90 |
| | | | அறிவியலால் ஆள்வோம் | |
| | | உரைநடை உலகம் | கணியனின் நண்பன் | |
| | | விரிவானம் | ஒளி பிறந்தது | |
| | | கற்கண்டு | மொழி முதல், இறுதி எழுத்துகள் | |
| | முதல் பருவ தொகுத்தறி தேர்வு- 2018-19 வினாத்தாள் விடைகளுடன் | | | 91-94 |


www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## இரண்டாம் பருவம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | கல்வி **கண்ணெனத் தகும்** | கவிதைப் பேழை | மூதுரை | 97-118 |
| | | | துன்பம் வெல்லும் கல்வி | |
| | | உரைநடை உலகம் | கல்விக்கண் திறந்தவர் | |
| | | விரிவானம் | நூலகம் நோக்கி... | |
| | | கற்கண்டு | இன எழுத்துகள் | |
| 2. | நாகரிகம், பண்பாடு **பாடறிந்து ஒழுகுதல்** | கவிதைப் பேழை | ஆசாரக்கோவை | 119-146 |
| | | | கண்மணியே கண்ணுறங்கு | |
| | | உரைநடை உலகம் | தமிழர் பெருவிழா | |
| | | விரிவானம் | மனம் கவரும் மாமல்லபுரம் | |
| | | கற்கண்டு | மயங்கொலிகள் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| 3. | தொழில், வணிகம் கூடித் தொழில் செய் | கவிதைப் பேழை | நானிலம் படைத்தவன் | 147-172 |
| | | | கடலோடு விளையாடு | |
| | | உரைநடை உலகம் | வளரும் வணிகம் | |
| | | விரிவானம் | உழைப்பே மூலதனம் | |
| | | கற்கண்டு | சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் | |
| | இரண்டாம் பருவ தொகுத்தறி தேர்வு- 2018-19 வினாத்தாள் விடைகளுடன் | | | 173-176 |




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## மூன்றாம் பருவம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **புதுமைகள் செய்யும் தேசமிது** | கவிதைப் பேழை | பாரதம் அன்றைய நாற்றங்கால் | 179-200 |
| | | உரைநடை உலகம் | தமிழ்நாட்டில் காந்தி | |
| | | விரிவானம் | வேலுநாச்சியார் | |
| | | கற்கண்டு | நால்வகைச் சொற்கள் | |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை **எல்லாரும் இன்புற** | கவிதைப் பேழை | பராபரக் கண்ணி | 201-224 |
| | | | நீங்கள் நல்லவர் | |
| | | உரைநடை உலகம் | பசிப்பிணி போக்கிய பாவை | |
| | | விரிவானம் | பாதம் | |
| | | கற்கண்டு | பெயர்ச்சொல் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| 3. | மனிதம், ஆளுமை **இன்னுயிர் காப்போம்** | கவிதைப் பேழை | ஆசிய ஜோதி | 225-244 |
| | | உரைநடை உலகம் | மனிதநேயம் | |
| | | விரிவானம் | முடிவில் ஒரு தொடக்கம் | |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| | மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு 2018-19 வினாத்தாள் விடைகளுடன் | | | 245-250 |




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 80562 94222 / 80562 15222

## DIRECT DEPOSIT

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-486 27755
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# முதல் பருவம்

## மனப்பாடச் செய்யுள்

### கவிதைப் பேழை

### இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

– பாரதிதாசன்

★ ★ ★

### சிலப்பதிகாரம்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்.

– இளங்கோவடிகள்

★ ★ ★

### காணி நிலம்

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அங்குத்

தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்

காணி நிலத்திடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்

கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இளநீரும்

பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும்.

– பாரதியார்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

3. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

4. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

5. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

6. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

7. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

8. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

9. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

※

– திருவள்ளுவர்

★★★





orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# இரண்டாம் பருவம்

## மூதுரை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் ※
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு. - ஔவையார்

## திருக்குறள்

1. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து ※
நோக்கக் குழையும் விருந்து.

2. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

3. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல். - திருவள்ளுவர்

## கடலோடு விளையாடு

விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா
அடிக்கும்அலை நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமதுகுடை - ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஜலசா
விண்ணின்இடி காணும்கூத்து - ஜலசா

பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஜலசா
பனிமூட்டம் உடல் போர்வை - ஜலசா
காயும்கதிர்ச் சுடர்கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும்வீடு - ஜலசா
மின்னல்வரி அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் - ஜலசா
முழுநிலவே கண்ணாடி - ஜலசா
மூச்சடக்கும்நீச்சல் யோகம் - ஜலசா
தொழும்தலைவன் பெருவானம் - ஜலசா
துணிவோடு தொழில்செய்வோம் - ஜலசா.

★ ★ ★

மனப்பாடச் செய்யுள்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# மூன்றாம் பருவம்

## பாரதம் அன்றைய நாற்றங்கால்

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள்பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

– தாராபாரதி

## பராபரக் கண்ணி

1. தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!

2. எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!

– தாயுமானவர்

## திருக்குறள்

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

2. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

3. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

– திருவள்ளுவர்

★ ★ ★



www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

www.surabooks.com

# முதல் பருவம்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் (மூன்று பருவம்) | | 1-4 |
| 1. | மொழி **தமிழ்த்தேன்** | கவிதைப் பேழை | இன்பத்தமிழ்* | 7-34 |
| | | | தமிழ்க்கும்மி | |
| | | உரைநடை உலகம் | வளர்தமிழ் | |
| | | விரிவானம் | கனவு பலித்தது | |
| | | கற்கண்டு | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | |
| 2. | இயற்கை **இயற்கை இன்பம்** | கவிதைப் பேழை | சிலப்பதிகாரம்* | 35-64 |
| | | | காணி நிலம்* | |
| | | உரைநடை உலகம் | சிறகின் ஓசை | |
| | | விரிவானம் | கிழவனும் கடலும் | |
| | | கற்கண்டு | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் **எந்திர உலகம்** | கவிதைப் பேழை | அறிவியல் ஆத்திசூடி | 65-90 |
| | | | அறிவியலால் ஆள்வோம் | |
| | | உரைநடை உலகம் | கணியனின் நண்பன் | |
| | | விரிவானம் | ஒளி பிறந்தது | |
| | | கற்கண்டு | மொழி முதல், இறுதி எழுத்துகள் | |
| | | முதல் பருவ தொகுத்தறி தேர்வு- 2018-19 | | 91-94 |




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# இயல் 1 தமிழ்த்தேன்

கவிதைப்பேழை

## இன்பத்தமிழ்



### ஆசிரியர் குறிப்பு :

| | |
|---|---|
| பெயர் | : பாரதிதாசன் |
| இயற்பெயர் | : சுப்புரத்தினம் |
| பிறந்த ஊர் | : புதுச்சேரி |
| பெற்றோர் | : கனகசபை – இலக்குமி அம்மையார் |
| பணி | : தமிழாசிரியர் |
| சிறப்புப்பெயர் | : பாவேந்தர், புரட்சிக்கவிஞர் |
| காலம் | : 29-04-1891 முதல் 21-04-1964 வரை |
| இயற்றிய நூல்கள் | : குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார், அழகின் சிரிப்பு. |

### நூல் வெளி

இப்பாடல் "பாரதிதாசன் கவிதைகள்" தொகுப்பில் "இன்பத்தமிழ்" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

### பொருளுரை

இனிக்கும் அமுதத்தை ஒத்திருப்பதால் தமிழுக்கு அமுது என்று பெயர். இன்பம் தரும் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது. தமிழுக்கு நிலவென்றும்பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றதாகும்.

தமிழுக்கு மணம் என்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் வாழ்க்கைக்கெனவே உருவாக்கப்பட்ட ஊராகும். தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. சிறந்த புகழ்மிக்க புலவர்களுக்கு இன்பத்தமிழே கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.

தமிழ் எங்கள் உயர்வின் எல்லையாகிய வான் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிர்விடச் செய்யும் தேனாகும். தமிழ் எங்கள் அறிவுக்குத் துணையாகும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க வாள் ஆகும்.

### விளக்கவுரை

தமிழ், அமுதம் எவ்வாறு இனிமையாக இருக்குமோ அதைப்போல இனிமையான மொழியாக இருப்பதால் தமிழை அமுதம் என்கிறார். மேலும் தமிழை மனித உயிருக்கு நிகராக ஒப்புமைப்படுத்துகின்றார். சமூகம் (சமுதாயம்) சிறப்புடன் வளர்வதற்குத் தமிழ்மொழி நீராகப் பயன்படுகிறது. தமிழ்மொழி நறுமணம் உடையது என்றும் கூறுகிறார். இன்பத்தமிழானது மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கெனவே உருவாக்கப்பட்ட ஊராகும்.

மனிதர்கள் பொலிவுடனும் இளமையுடனும் இருப்பதற்குப் பால் எப்படிப் பயன்படுகிறதோ! அதனைப் போன்று வளமும் சுவையும் நிறைந்தது தமிழ்மொழி. இந்தத்தமிழ் சிறந்த புகழ்மிக்க தமிழ்ப்புலவர்களின் புலமையை அறிவிக்கின்ற கூர்மையான வேலாகும். தமிழ்மொழி எங்கள் உயர்வுக்கு வானமாகும். தமிழ்மொழி எங்கள் அறிவுக்குத் தோள்கொடுக்கும். தமிழ்மொழி எங்கள் கவிதையின் கவித்துவத்திற்கு வாளாகும்.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**சொல்லும் பொருளும்**

1. நிருமித்த – உருவாக்கிய
2. விளைவு – வளர்ச்சி
3. சமூகம் – மக்கள் குழு
4. அசதி – சோர்வு

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஏற்றத் தாழ்வற்ற .................. அமைய வேண்டும்.**

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

[விடை: அ) சமூகம்]

**2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ................ ஆக இருக்கும்.**

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

[விடை: ஈ) அசதி]

**3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................**

அ) நிலயென்று ஆ) நிலவென்று
இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

[விடை: ஆ) நிலவென்று]

**4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................**

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள்
இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

[விடை: ஆ) தமிழெங்கள்]

**5. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று
இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

[விடை: ஆ) அமுது + என்று]

**6. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்
இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

[விடை: அ) செம்மை + பயிர்]

### இன்பத்தமிழ் பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக

அ) விளைவுக்கு – பால்
ஆ) அறிவுக்கு – வேல்
இ) இளமைக்கு – நீர்
ஈ) புலவர்க்கு – தோள்

விடை:
அ) விளைவுக்கு – நீர்
ஆ) வாழ்வுக்கு – ஊர்
இ) இளமைக்கு – பால்
ஈ) புலவர்க்கு – வேல்

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக

(எ.கா.) பேர் - நேர்

| | |
|---|---|
| விடை : பேர் - நேர் | அமுதென்று - நிலவென்று |
| பேர் - நீர் | உயிருக்கு - விளைவுக்கு |
| பேர் - ஊர் | இளமைக்கு - புலவர்க்கு |
| பால் - வேல் | தமிழுக்கு - வாழ்வுக்கு |
| வான் - தேன் | உயர்வுக்கு - அசதிக்கு |
| தோள்- வாள் | அறிவுக்கு - கவிதைக்கு |

## குறுவினா

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**
அமுதம், நிலவு, மணம்.

2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**
தேன், தங்கம், கரும்பு, சந்தனம், அமுதசுரபி, நவமணிகள் போன்றவற்றோடு தமிழை ஒப்பிடுவேன்.

## சிறுவினா

1. **இன்பத் தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

2. **சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**
**(விளைவு – விளைச்சல்)**
(i) நீரின்றி வேளாண்தொழில் (விளைச்சல்) நிகழாது.
(ii) நீர் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் போன்றது.
(iii) நீரினால் விளையும் விளைச்சலினால் மக்கள் பயன் பெறுவர்.

## சிந்தனை வினா

1. **வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**
(i) வேல் கூர்மையான ஆயுதம் அதைப்போல தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்கள், பாடல்கள், கவிதைகள் கூர்மையான கருத்துகளைக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிறது.
(ii) ஆகவே தமிழ், வேலுடன் ஒப்பிடப்படுகிறது. அதேபோல் கத்தியின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது என்ற பழமொழியும் இதனையே விளக்கும்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

**1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.**

கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் இனிமையாகப் பாடச் செய்தல்.

தமிழுக்கும் அமுதென்றுபேர்! – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! – இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

**2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது ஏன் என்பது குறித்து கலத்துரையாடுதல்.

**மாணவன் 1** : வணக்கம்! கவிஞர்கள் தமிழை அமுது, நிலவு, மணம் என்று அழைக்கிறார்கள். அதைப் பற்றி உனக்குத் தெரியுமா?

**மாணவன் 2** : தெரியும். அமுதம் என்பது வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவுப் பொருள் ஆகும். அது மிகவும் சுவை உடையது என்றும் அதனை உண்பதினால் தேவர்கள் சாகா வரம் பெற்றுள்ளார்கள் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. நல்ல சுவையுள்ள உணவை நாம் உண்ணும்போது தேவாமிர்தமாக இனிக்கிறது என்றும் நாம் கூறுவோம். அதைப்போல் கவிஞர்களும் தமிழ் இனிமையானது என்ற பொருளிலும், இறவாநிலையில் உள்ளது என்ற பொருளிலும் தமிழை அமுது எனக் கூறுகிறார்கள்.

**மாணவன் 3** : ஆமாம், ஆமாம் அதேபோல்தான் நிலவு என்று அழைப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. நிலவானது குளிர்ச்சி பொருந்தியது. அதுமட்டுமின்றி உலகின் இருளைப் போக்கி வெளிச்சத்தைத் தருகிறது. தமிழ் தண்மையானது(குளிர்ச்சி) என்பதாலும் மக்களின் அறியாமை என்ற இருளைப் போக்கி ஒளியைத் தருவதாலும் தமிழை நிலவு என்று அழைக்கிறார்கள்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


மாணவன் 2 : சரியாகச் சொன்னாய். மணம் என்று கூறுவதற்கும் ஒரு காரணம் உண்டு. அது என்னவெனில் பூக்களின் மணம், காற்றில் கலந்து எல்லாவிடங்களிலும் பரவுகிறது. அதேபோல் நம் தமிழ்மொழியும் மாநிலம் கடந்து, நாடு கடந்து ஏன் உலகமெங்கும் தன் நறுமணத்தைப் பரப்பியுள்ளது. எனவேதான் தமிழை மணம் என்ற பெயரிட்டு அழைத்துள்ளனர்.

**3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

மாணவர்கள் தமிழுக்குச் சூட்டப்படும் பெயர்களை அறிந்து எழுதுதல்.

தேன்தமிழ், செந்தமிழ், இனிமைத் தமிழ், இளமைத் தமிழ், முத்தமிழ்...

**4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.**

கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இரக்கத்துடன் இனிமையாகப் பாடச் செய்தல்.

**தென்றலுக்கு நன்றி!**

*கமுகொடு நெடிய தென்னை*
*கமழ்கின்ற சந்தனங்கள்*
*சமைக்கின்ற பொதிகை அன்னை*
*உனைத் தந்தாள்; தமிழைத் தந்தாள்!*
*தமிழ் எனக் ககத்தும், தக்க*
*தென்றல் நீ புறத்தும் இன்பம்*
*அமைவுறச் செய்வதை நான்*
*கனவிலும் மறவேன் அன்றோ?*

– பாரதிதாசன்

## கூடுதல் வினாக்கள்

**பொருள் தருக :**

வான் - வானம்
இணை - சமம்
சுடர் - ஒளி

**எதிர்சொல் தருக:**

இளமை × முதுமை
புகழ் × இகழ்
அசதி × சுறுசுறுப்பு
ஒளி × இருள்
இன்பம் × துன்பம்
அமுதம் × விடம்

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


**வினாக்கள் :**

**1. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?**

பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்

**2. பாரதிதாசனின் பெற்றோர் யாவர்?**

பாரதிதாசனின் பெற்றோர்

தந்தையார் – கனகசபை

தாயார் – இலக்குமி.

**3. பாரதிதாசனார் 'புரட்சிக்கவி' என்று போற்றப்படக் காரணம் யாது?**

பாரதிதாசனார் தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு ஆகியவை குறித்த புரட்சிகரமான கருத்துகளைப் பாடியுள்ளமையால் 'புரட்சிக்கவி' என்று போற்றப்படுகிறார்.

**4. பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**

**பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் :** புரட்சிக் கவி, பாவேந்தர்.

**5. பாரதிதாசன் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

| | |
|---|---|
| பெயர் | : பாரதிதாசன் |
| இயற்பெயர் | : சுப்புரத்தினம் |
| பிறந்த ஊர் | : புதுச்சேரி |
| பெற்றோர் | : கனகசபை – இலக்குமி அம்மையார் |
| பணி | : தமிழாசிரியர் |
| சிறப்புப்பெயர் | : பாவேந்தர், புரட்சிக் கவிஞர் |
| காலம் | : 29-04-1891 முதல் 21-04-1964 வரை |
| இயற்றிய நூல்கள் | : குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார், அழகின் சிரிப்பு. |

☆ ☆ ☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores




கவிதைப்பேழை

# தமிழ்க்கும்மி

## ஆசிரியர் குறிப்பு :



| | |
|---|---|
| பெயர் | : பெருஞ்சித்திரனார் |
| இயற்பெயர் | : மாணிக்கம் |
| ஊர் | : சேலம் மாவட்டம் – சமுத்திரம் |
| பெற்றோர் | : துரைசாமி – குஞ்சம்மாள் |
| மனைவி | : தாமரை அம்மையார் |
| காலம் | : 10-03-1933 முதல் 11-06-1995 வரை |
| சிறப்புப் பட்டம் | : "பாவலரேறு" |
| இயற்றிய நூல்கள் | : கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து |
| இதழ்கள் | : தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம். |

## நூல் வெளி

இப்பாடல் "கனிச்சாறு" என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது, இந்நூல் எட்டுத் தொகுதிகளைக் கொண்டது. இது தமிழுணர்வு செறிந்த பாடல்களைக் கொண்டது.

## பொருளுரை

இளம்பெண்களே! எட்டுத் திசைகளிலும் தமிழின் புகழ் பரவவிடுமாறு கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம்.

பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவைப் பெருக்கும் பல நூல்களைப் பெற்றுள்ள மொழி. பெரும் கடல் சீற்றங்களினாலும், கால மாற்றங்களினாலும் அழியாமல் நிலை பெற்ற மொழி.

தமிழ் பொய்யை அகற்றும் மொழி; தமிழ் மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி; அன்பு உடையவருக்கு இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி. உயிர் போன்ற உண்மையைப் புகட்டி அறத்தின் உயர்வை உணர்த்தும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ வழிகாட்டும் மொழி தமிழ்மொழி.

## விளக்கவுரை

தமிழ் இளம் பெண்கள் விரும்பிப் பாடியப் பாடல் கும்மிப்பாடல்.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு என எட்டுத் திசைகளிலும் தமிழ் மற்றும் தமிழரின் புகழ் உலகம் முழுக்க பரவுமாறு கைகொட்டிக் கும்மியடித்தனர்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய மொழி. அறிவைப் பெருக்க இலக்கண, இலக்கியம் எனப் பல நூல்களைப் பெற்றுள்ள மொழி நம் தமிழ்மொழி. பல பெரும் கடல் சீற்றங்களினாலும், காலநிலை மாற்றங்களினாலும் அழியாமல் நிலை பெற்ற மொழி.

பொய்மைகளை அகற்றி மனத்தின் அறியாமை என்னும் இருளைப்போக்கும் மொழி. அன்புள்ளம் கொண்டவர்களுக்கு இன்பம் தரும் மொழி. உயிர்போன்ற உண்மையைப் புகட்டி ஒழுக்கம் தவறாமல் அறத்தோடுநின்று உயர்வை உணர்த்தும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ வழிகாட்டும் மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


### சொல்லும் பொருளும்

1. ஆழிப்பெருக்கு - கடல் கோள்
2. ஊழி - நீண்டதொருகாலப்பகுதி
3. மேதினி - உலகம்
4. உள்ளப்பூட்டு - உள்ளத்தின் அறியாமை

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தாய் மொழியில் படித்தால் ................. அடையலாம்.**

அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

[விடை: ஆ) மேன்மை]

**2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ................. சுருங்கிவிட்டது.**

அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

[விடை: இ) வானம்]

**3. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

[விடை: ஈ) செம்மை + தமிழ்]

**4. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.................**

அ) பொய் + அகற்றும்
ஆ) பொய் + கற்றும்
இ) பொய்ய + கற்றும்
ஈ) பொய் + யகற்றும்

[விடை: அ) பொய் + அகற்றும்]

**5. பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும்
இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்

[விடை: அ) பாட்டிருக்கும்]

**6. எட்டு + திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை
இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

[விடை: அ) எட்டுத்திசை]

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## நயம் உணர்ந்து எழுதுக

1. **பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.**

**சீர்மோனை :**

கொட்டுங்கடி – கோதையரே
எட்டுத்திசை – எட்டிடவே
ஊழி – ஊற்று
ஆழிப் – அழியாமல்
பொய் – பூண்டவரின்
மெய்புகட்டும் – மேதினி

2. **பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**

**அடிஎதுகை :**

கொட்டுங்கடி – எட்டு
ஊழி – ஆழி
பொய் – மெய்

**சீர் எதுகை :**

எட்டுங்கடி – எட்டிடவே
ஆழி – அழியாமலே

3. **பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

**இயைபு :**

கொட்டுங்கடி – கொட்டுங்கடி,
கொண்டதுவாம் – நின்றதுவாம்,
பாட்டிருக்கும் – காட்டிருக்கும்.

## குறுவினா

1. **தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

**தமிழ் மொழியின் செயல்கள் :**

(i) பொய்மை அகற்றும், மனதில் உள்ள அறியாமை என்ற இருளை நீக்கும்.

(ii) அன்பு உடையவருக்கு இன்பம் தரும். பாடல்கள் நிறைந்த மொழி. உயிர் போன்ற உண்மையைக் கற்பித்து அறத்தின் உயர்வை உணர்த்தும். இவ்வுலக மக்கள் வாழ்வதற்கு வழிகாட்டும்.

2. **செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?** ※

செந்தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## சிறுவினா

**1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**

(i) நம் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய மொழி, அறிவைப் பெருக்கும் விதமாகப் பல சிறந்த நூல்களைப் பெற்றுள்ள மொழி.

(ii) இப்புகழ் பெற்ற மொழி இயற்கை மாற்றங்களான கடல் சீற்றங்களினாலும் கால மாற்றங்களினாலும் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கும். இந்த உலகம் சிறந்து வாழ வழிகாட்டும் மொழி.

**2. தமிழ்க் கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.**

(i) நம் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய மொழி, அறிவைப் பெருக்கும் விதமாகப் பல சிறந்த நூல்களைப் பெற்றுள்ள மொழி.

(ii) இப்புகழ் பெற்ற மொழி இயற்கை மாற்றங்களான கடல் சீற்றங்களினாலும் கால மாற்றங்களினாலும் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கும்.

## சிந்தனை வினா

**1. தமிழ்மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?**

பொய்மை அகற்றி மனதில் உள்ள அறியாமையை அகற்றும் அன்புடைய பலரின் இன்பம் நிறைந்த மொழி, உயிர்போன்ற உண்மையை ஊட்டி உயர்ந்த அறத்தைத் தந்து, இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழியாக தமிழ்மொழி விளங்குகிறது.

## கற்பவை கற்றபின்

**1. தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.**

தமிழ்க்கும்மி பாடலை இசை நயத்தோடு பாடச் செய்தல்



கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி !
ஊழி பலநூறு கண்டதுவாம் அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம் !
பொய் அகற்றும் உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் – உயிர்

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த
மேதினி வாழவழி காட்டிருக்கும்!

– பெருஞ்சித்திரனார்

**2. பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.**

வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி
மண் தோன்றி மழைதோன்றி மலைகள் தோன்றி
ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி
ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி!

## கூடுதல் வினாக்கள்

**எதிர்சொல் தருக.**

1. பல × சில
2. முற்றும் × தொடரும்
3. பொய் × மெய்
4. அழிவு × ஆக்கம்

**வினா :**

**1. பெருஞ்சித்திரனார் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

| | |
|---|---|
| பெயர் | : பெருஞ்சித்திரனார் |
| இயற்பெயர் | : மாணிக்கம் |
| ஊர் | : சேலம் மாவட்டம் – சமுத்திரம் |
| பெற்றோர் | : துரைசாமி – குஞ்சம்மாள் |
| மனைவி | : தாமரை அம்மையார் |
| காலம் | : 10-03-1933 முதல் 11-06-1995 வரை |
| சிறப்புப் பட்டம் | : "பாவலரேறு" |
| இயற்றிய நூல்கள் | : கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் |
| இதழ்கள் | : தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம். |

☆ ☆ ☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



உரைநடை உலகம்

# வளர் தமிழ்



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ..................** ※

அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

[விடை: ஆ) பழமை]

**2. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................** ※

அ) இடன் + புறம் ஆ) இடை + புறம்

இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம் [விடை: இ) இடம் + புறம்]

**3. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை

இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை [விடை: ஆ) சீர்மை + இளமை]

**4. சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...............**

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம் [விடை: ஆ) சிலப்பதிகாரம்]

**5. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............**

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்

இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ் [விடை: ஆ) கணினித்தமிழ்]

**6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர்..............**

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்

இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் [விடை: ஆ) பாரதியார்]

**7. 'மா' என்னும் சொல்லின் பொருள் .....................**

அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

[விடை: இ) விலங்கு]

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ................. [விடை: மொழி]
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ........................ [விடை: தொல்காப்பியம்] ※
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ............................ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும். [விடை: எண்களின்]

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## சொற்களைத் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக

**1.** தனிச்சிறப்பு ............................................................................

**விடை :** திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது அதனின் **தனிச்சிறப்பு** ஆகும்.

**2.** நாள்தோறும் ....................................................................

**விடை :** நாம் **நாள்தோறும்** நல்ல பழக்கவழக்கத்தைக் கடைபிடிப்பது நல்லது.

## குறுவினா

**1. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**

**தமிழ்மொழி - மூத்தமொழி :**

(i) இலக்கியங்கள் தோன்றிய பிறகே அவற்றிற்கு இலக்கணம் தோன்றியிருக்க வேண்டும். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம்.

(ii) இந்நூல் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக அறியப்படுகிறது. அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கியங்கள் பல இருந்திருக்க வேண்டும். இதனைக் கொண்டு தமிழ் தொன்மைமிக்க மூத்த மொழி என்பதை அறியலாம்.

**2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** ※

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, யசோதர காப்பியம், சூளாமணி, நாககுமார காவியம், உதயகுமார காவியம், நீலகேசி.

## சிறுவினா

**1. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?** ※

**அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு :**

(i) திணை - உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

(ii) உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமையவேண்டும்.

(iii) ஆனால் நம் முன்னோர் தாழ்திணை என்று கூறாமல் உயர்வு அல்லாத திணை (அல் + திணை) அஃறிணை என்று பெயரிட்டனர்.

**பாகற்காய் :**

பாகற்காய் கசப்புச் சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் (பாகு + அல் + காய்) பாகற்காய் என வழங்கினர்.

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

**தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம்:**

(i) ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை ஆகியவை ஒருங்கே அமைந்த இலக்கியங்கள் பலவற்றைக் கொண்டது தமிழ்மொழி.

(ii) பன்மொழி கற்ற கவிஞராகிய பாரதியார், தமிழ் மொழியின் இனிமையை

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடுகிறார்.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


**3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

(i) உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஒரு சில மொழிகளே! தமிழ்மொழி அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும்.

(ii) தமிழ் இலக்கியங்கள் ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.

(iii) தமிழ் மொழி பேசவும், படிக்கவும், எழுதவும் உகந்த மொழி. தமிழ் எழுத்துகளின் ஒலிப்பு முறை மிக எளிமையானது. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

(iv) இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கொண்ட மொழியாகும். தமிழ் மொழி சொல்வளம் மிக்கது. ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ்மொழியின் சிறப்பாகும்.

## சிந்தனை வினா

**1. தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

**தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியமொழி :**

(i) தமிழ் எழுத்துகள் வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், குவித்தல் ஆகிய மூன்று எளிய இயக்கங்களால் உயிர் ஒலிகள் பன்னிரண்டையும் எளிமையாக ஒலிக்க இயலும்.

(ii) நாக்கு, உதடு, பல், அண்ணம் ஆகிய பேச்சுறுப்புகளின் உதவியால் காற்றை அடைத்தும் வெளியேற்றியும் மெய்யொலிகளை ஒலிக்க இயலும்.

(iii) உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர், மெய் ஆகியவற்றின் அடிப்படை ஒலிப்பு முறைகளை அறிந்தால் 216 உயிர்மெய் எழுத்துகளையும் எளிதாகக் கற்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தால் தமிழ் படித்தல் இயல்பாக நிகழும்.

(iv) தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிமையானது இடப்புறமிருந்து வலப்புறமாகச் சுழித்து எழுதுவது குழந்தைகளின் இயல்பு. இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. இதன் மூலம் தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பதை அறியலாம்.

**2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

(i) தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.

(ii) துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள், கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.

(iii) தற்போது அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. எனவே தமிழ்மொழி வளர்மொழி என்பதை உணர்கிறேன்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

**1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**

மாணவர்களைக் கால மாற்றத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் மொழி தமிழ்மொழி பற்றிப் பேசச் செய்தல்.

**மாணவன் 1** : வணக்கம். நம் தமிழ்மொழியானது காலத்திற்கேற்றார்போல் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' எனப் புகழப்படும் தமிழ் உலகில் பல இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே தான் உள்ளன. தமிழ் மொழியில் உள்ள இலக்கிய இலக்கண வளங்களால்தான் அழியா நிலை பெற்றுள்ளது எனலாம்.

**மாணவன் 2** : அதுமட்டுமா? ஒலியாகத் திரிந்து சித்திரமாய் மாறி பல மொழிகளுடன் இணைந்து உருக்கள் பலப்பல எடுத்தும் காலம் பல கடந்து கல்வெட்டுகளில் செதுக்கப்பட்டும் ஓலைச்சுவடிகளில் வரையப்பட்டும் தற்போது காகிதங்களில் மிளிர்ந்து கொண்டும் உள்ளது நம்தாய் மொழியாம் தமிழ். இது காலச்சூழல் மாற்றங்களுக்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் சிறப்பு பெற்றது.

**மாணவன் 1** : பிறமொழிகள் தங்கள் தொன்மை மாறாமலும் அவை இருந்த இடத்திலிருந்து இறங்கி வராமலும் காலத்திற்கேற்ப மாற்றம் கொள்ளாமலும் இருந்ததால் வழக்கொழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழானது கற்றவர் கல்லாதவர் என அனைவருடைய நாவிலும் நடனமாடுகிறது. இதனால் அழியாப் புகழுடன் விளங்குகிறது. கன்னித்தமிழாய் இருப்பதோடல்லாமல் மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் விளங்குகிறது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். தமிழ் மேடைத் தமிழ், எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என்று வெவ்வேறு உருவத்தில் தன்னை வளைத்துக் கொடுக்கும் தன்மையால்தான் இன்றும் வளர்ந்து கொண்டே வருகிறது.

**மாணவன் 1** : இன்றைய நடைமுறைக்கு ஏற்ப ஊடகங்களில் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்மொழியானது தனியாக வளர்க்கப்படவில்லை. பக்தி இலக்கியக் காலத்தில் பக்திப் பாடல்கள், சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசப்பக்திப் பாடல்கள் என மக்கள் மனதில் வளர்ந்து செழுமை பெற்றுள்ளது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். இவ்வாறு வளரும் தமிழ்மொழியானது இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செல்லும் வகையில் புதிய கலைச் சொற்களை உருவாக்கிக் கொண்டு தமிழ்மொழி தன்னை நாள்தோறும் புதுப்பித்துக் கொண்டே வருகிறது. தமிழ் இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை உருவாக்குகிறது.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


**மாணவன் 1** : அதுமட்டுமா? சமூக ஊடங்களிலும் பயன்படத்தக்க திறன் கொண்ட புது மொழியாகவும் தமிழ் திகழ்ந்து வருகிறது எனலாம். தமிழ் மூத்த மொழியாக மட்டுமின்றி இனிமை, எளிமை, சீர்மை, வளமை, இளமை மிக்க வளர்மொழியாகவும் நாளும் சிறந்து விளங்கும் புதுமொழியாகவும் திகழ்கிறது. தற்போது தமிழ்மொழி அறிவியல் தமிழ், கணினித் தமிழ், மாற்றங்களுக்கு ஏற்றவாறு மேலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. காலத்தின் தேவைக்கேற்ப சரியான சொற்கள் தமிழில் புகுந்து தொடர்ந்து இன்றும் இயங்கி வருகின்றது.

**2. தமிழ் பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

மாணவர்கள் நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்களைக் கற்றுத் தருதல்.

**தமிழ்சொற்கள் :**

1. வணக்கம்
2. வாருங்கள்
3. அமருங்கள்
4. சாப்பிடுங்கள்
5. எப்படி இருக்கிறீர்கள்?
6. உங்கள் பெயர் என்ன?
7. தண்ணீர்
8. நன்றி
9. பொறுத்துக்கொள்ளுங்கள்
10. வாழ்க வளர்க

**3. வாழ்த்துகளைத் தமிழில் கூறுவோம்.**

மாணவர்கள் தமிழில் வாழ்த்துகளை அறிந்து வந்து எழுதச் செய்தல்.

**திருமண வாழ்த்து**

பதினாறுப் பெற்று பெறு வாழ்வு வாழ்க!
இரட்டைக்கிளவிபோல் என்றும் சேர்ந்தே வாழ வேண்டும்.
இன்றுபோல் என்றும் இன்முகத்துடன் வாழ்க!
அன்பு, அறிவு, பண்பு, பணிவுடன் வாழ்க பல்லாண்டு!
என்றெல்லாம் அறத்துடன் வாழ வேண்டும்.
எட்டுத்திசைக்கும் புகழ் பரவ வாழ வேண்டும்.
எடுத்துக்காட்டாய் வாழ வேண்டும் என வாழ்த்துகிறோம்.
என் மனமார்ந்த திருமண நல்வாழ்த்துகள் !
என் அன்பான திருமண நல்வாழ்த்துகள் !

☆ ☆ ☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores




விரிவானம்

# கனவு பலித்தது

(கடிதம்)



## மதிப்பீடு

**1. அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

**'கனவு பலித்தது' – கடிதக் கருத்துகள் :**

**இன்சுவை :**

ஆறாம் வகுப்பு படிக்கும் போதே அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தாள். அவ்விருப்பம் நிறைவேறியது. ஆம் அவள் சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் இளம் ஆராய்ச்சியாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

இன்சுவை அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் படித்ததனால் தன் இலக்கை அடைவது கடினமானது என எண்ணினாள். ஆனால் அவளுடைய அத்தையின் ஊக்குவிப்பினால் தன் இலக்கை அடைந்தாள்.

**சாதனையாளர்கள் :**

சாதனை புரிவதற்கு மொழி தடை இல்லை. கணிதமேதை இராமானுஜம். மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர் சிவன், இஸ்ரோ அறிவியல் அறிஞர் வளர்மதி போன்றோர் தம் தாய்மொழித் தமிழில் பயின்ற சாதனையாளர்களாவர்.

**தமிழர்களின் அறிவியல் சிந்தனை :**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்ததுதான் உலகம் என்பது அறிவியல் உண்மை. இக்கருத்தினைத் தொல்காப்பியரும் தமது தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' மேலும், உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியுள்ளனர்.

**இலக்கியங்கள் கூறும் சான்றுகள் :**

கடல்நீர் ஆவியாகி மேகமாகிப் பின்னர் குளிர்ந்து மழையாகப் பொழியும் என்ற அறிவியல் உண்மையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவை

**கார் நாற்பது :**

'கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி......'

**அறுவை மருத்துவம் :**

போரில் புண்பட்ட வீரரின் மார்பை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. 'நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு'. சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தி நற்றிணை என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


"கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய
நரம்பின் முடிமுதிர் பரதவர்"

**கபிலர் - கலீலியோ கருத்து :**

புல்லின் நுனியில் நிற்கும் பனித்துளியில் நெடுந்தொலைவில் நிற்கும் பனைமரம் முழுமையாகத் தெரியும் காட்சியைத் திருவள்ளுவமாலைப் பாடலில் விளக்கியுள்ளார்.

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்.

ஒளியைக் கோட்டம் அடையச் செய்து தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்று பிற்காலத்தில் கலீலியோ நிறுவியுள்ளார்.

தமிழர்கள் அறிவியல் துறையில் மட்டுமின்றி பல்வேறு துறைகளிலும் கோலோச்சி வருகிறார்கள். நம் தமிழர்கள் இன்றைய அறிவியல் துறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளமை நமக்குப் பெருமையாகும்.

## கற்பவை கற்றபின்

**1. இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.**

இக்கதைக்கு நான் விரும்பும் தலைப்பு "எண்ணம் ஈடேறியது."

**2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.**

மாணவர்களை தமிழில் 'உங்கள் எதிர்கால கனவு' குறித்து ஒரு கடிதம் எழுதச் செய்தல்.

**இடம் :** செஞ்சி,
**நாள் :** 05-06-2019.

அன்புள்ள அத்தை,

நான் இங்கு நலமாக இருக்கிறேன். நீங்கள் அங்கு நலமாக உள்ளீர்களா? உங்களின் அறிவுரையின் படியும் வழிகாட்டுதலின்படியும் நான் இன்று அறிவியல் துறையில் சிறந்து விளங்குகின்றேன்.

என் எதிர்காலக் கனவு நனவாவதற்கு என்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்வேன். என் உயர்வும் உழைப்பும் நாட்டை உயர்த்துவதாக இருக்கும். என் இலட்சியப் பாதை மிகவும் சிறப்பானதாக அமையும். பத்துப் பேரோடு பதினொன்றாவது நபராக நான் இருக்கமாட்டேன். என் கடமையை உயிரென மேற்கொண்டு சாதனை புரிவேன்.

என்னுடைய அறிவியல் ஆய்வு மற்ற வல்லரசு நாடுகளுடன் போட்டியிடுவதாக இருக்காது. நம் நாட்டில் அழிவின் விளிம்பில் இருக்கும் விவசாயத்திற்கு உதவும் வகையில் இருக்கும் நாட்டின் முதுகெலும்பு கிராமங்கள், அக்கிராமங்களின் முதுகெலும்பு இளைஞர்கள், அவர்களுள் ஆர்வமுள்ள கிராமப்புற இளைஞர்களைக் கூட்டி விழிப்புணர்வூட்டி வேளாண்துறை மேம்படச் செய்வேன்.

மழைநீரைச் சேமிக்கவும், புதிய விவசாய உத்திகளைப் பயன்படுத்தி குறைந்த நாட்களில் மகத்தான விளைச்சலை உருவாக்குவேன். வேளாண் பணிக்கான புதிய எந்திரங்களைக் கண்டறிவேன். அவற்றால் சுற்றுச்சூழல் பாதிப்படையாதபடிப் பார்த்துக் கொள்வேன்.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


நம்நாடு வறுமை, பஞ்சம், பிணிபோக்கி செழுமை, வளமை, பொருளாதார முன்னேற்றம் தொழில்வளம் கொழிக்க அறிவியலின் வழி நின்று பாடுபடுவேன். மேலும் வேறென்ன செய்யலாம் என்பதை நீங்கள் அவ்வப்போது கூறுங்கள்.

இப்படிக்கு
தங்கள் அன்புக்குரிய,
ச. விஷ்ணு

**உறைமேல் முகவரி :**

திரு. அ. கதிர் அவர்கள்,
எண். 7, பிள்ளையார் கோயில் தெரு.
பரனூர், சென்னை - 600 060.

**3. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

(i) இன்சுவை, தான் எடுத்த செயலில் வெற்றிபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள். அவளுடைய அத்தை கூறிய அறிவுரைகளைச் சிரமேற்கொண்டு பின்பற்றினாள்.

(ii) நூலகம் சென்று பல நூல்களைப் படித்து சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொண்டாள். தன்னுடைய வாழ்வில் அதனை மேற்கொண்டாள்.

(iii) விடாமுயற்சியும், உழைப்பும் மனிதனை உயர்த்தும் என்பதற்கு இன்சுவை சான்றாகத் திகழ்ந்தாள்.

**4. 'கனவு பலித்தது' என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.**

**கனவு பலித்தது என்ற தலைப்பு இக்கதைக்குப் பொருந்தும் விதம் :**

(i) எண்ணங்கள் நேரானால் செயல்களும் நேராகும். வெற்றியும் நம் கைவசமாகும். இக்கதையில் வரும் இன்சுவை சிறுவயதிலேயே அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்பதைத் தன் விருப்பமாகக் கொண்டுள்ளாள்.

(ii) அவள் தமிழ்வழியில் படிப்பதால் தன் இலக்கை அடைய முடியுமா என அச்சமுற்றாள். இன்சுவையின் அத்தை பல சாதனையாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். மேலும் பண்டைத் தமிழர்களின் அறிவியல் சிந்தனைகளையும் எடுத்துக் கூறியிருந்தார்.

(iii) நூலகம் சென்று சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொள்வது இன்சுவையின் சிந்தனைக்கு வளம் சேர்க்கும், அறிவியல் மனப்பான்மை பெருகும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

(iv) இதனைச் சிரமேற்கொண்டு இன்சுவை, ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் படித்து சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் இளம் ஆராய்ச்சியாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாள்.

(v) இன்சுவையின் கடும் உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் ஆர்வத்துடனும் படித்தனால் தன் இலக்கை அடைந்தாள். அவளுடைய கனவும் பலித்தது.

☆ ☆ ☆

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


கற்கண்டு

# தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

## மதிப்பீடு

**1. கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.**

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் .............. [விடை: அது]
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் ....................... [விடை: தீ]
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் .............................. [விடை: அஃது]

## குறுவினா

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

(i) தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை,

(ii) எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம்.

**2. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**

(i) வல்லினம் : க், ச், ட், த், ப், ற்.

(ii) மெல்லினம் : ங், ஞ், ண், ந், ம், ன்

(iii) இடையினம் : ய், ர், ல், வ், ழ், ள்

**3. தமிழ் எழுத்துக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

(i) குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு : 1 மாத்திரை

(ii) நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு : 2 மாத்திரை

(iii) மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு : ½ மாத்திரை

(iv) ஆய்த எழுத்து ஒலிக்கும் கால அளவு : ½ மாத்திரை.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவை கண்டுபிடி.**

எ. கா. கபிலர் – 1 + 1 + 1 + ½ = 3½

மாணவர்களைத் தமிழ் எழுத்துகளின் மாத்திரை அளவை அறிந்து கொள்ளச் செய்தல்.

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


| வ. எண் | பெயர் | மாத்திரை அளவு |
|---|---|---|
| 1 | அரவிந்தன் | 1 + 1 + 1 + ½ + 1 + ½ = 5 |
| 2 | அசுவின் | 1 + 1 + 1 + ½ = 3½ |
| 3 | செந்தாழினி | 1 + ½ + 2 + 1 + 1 = 5½ |
| 4 | ஆனந்த் | 2 + 1 + ½ + ½ = 4 |

## மொழியை ஆள்வோம்

### கேட்டும் பார்த்தும் உணர்க :

**1. இனிய தமிழ் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் இனிமையாகப் பாடச் சொல்லி கேட்டு மகிழ்தல்.

மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்.
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்.
கைவசமாவது விரைவில் வேண்டும்.
தனமும் இன்பமும் வேண்டும்.
தரணியிலே பெருமை வேண்டும்.
கண் திறந்திட வேண்டும்.
காரியத்தில் உறுதி வேண்டும்.
பெண் விடுதலை வேண்டும்.
பெரிய கடவுள் காக்க வேண்டும்.
மண் பயனுற வேண்டும்.
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்.

**2. தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.**

தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சியில் ஆற்றிய உரைகளைக் கேட்டு மகிழ்தல். மாணவர்கள் இச்செயல்பாட்டினைத் தாங்களே செய்து பார்க்க வேண்டும்.

### கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக

**1. தமிழ் இனிது 2. தமிழ் எளிது 3. தமிழ் புதிது**

**1. தமிழ் இனிது :**

அனைவருக்கும் வணக்கம்! நம் தாய்மொழியாம் தமிழின் இனிமை, எளிமை, புதுமை பற்றிப் பார்ப்போமா! நம் தாய்மொழியாம் தமிழை உயர்தனிச் செம்மொழி


www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


என்று பெயரிட்டபோதே அதன் சிறப்புகளை அனைவரும் அறிவர். இது தனித்து இயங்கும் மொழி, செம்மையான மொழி எனச் சிறப்பிக்கலாம்.

தமிழ் என்றால் அழகு, தமிழ் என்றால் இனிமை. அதனால்தான் இதனைத் தேன்தமிழ், தீந்தமிழ் முதலான சொற்களால் அழைக்கின்றனர். தமிழ் என்ற சொல்லைத் தம்-இழ் எனப் பிரித்தோமேயானால் தம்மிடத்தில் 'ழ்' ழைக் கொண்ட மொழி எனப் பொருள் கொள்ளலாம். தமிழில் மூன்று இனங்கள் உண்டு. அவை முறையே வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகும்.

"தேனொக்கும் தமிழே! நீ கனி, நான்கிளி

வேறென்ன வேண்டும் இனி?"

"செந்தமிழ் நாடெனும் போதினிலே

இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!"

இப்பாடல் வரிகள் தமிழின் இனிமையைப் பறைசாற்றும்

## 2. தமிழ் எளிது :

தமிழ் இனிய தமிழ் என்பதோடு எளிய தமிழ் எனவும் கூறப்படுகிறது. தமிழ் மொழியானது பேசவும் படிக்கவும் மிகவும் எளிதானது. இந்தச் சிறப்பு உலகில் எந்த மொழிக்கும் இல்லாதது. தமிழ் மொழியானது எழுதுவதற்கும் படிப்பதற்கும் எளிமையான மொழி. உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் போதும்.

எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழும். தமிழ்மொழியை எழுதும் முறையும் எளிதானது. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. தமிழ் எழுத்துகள் மேல் உதடு, கீழ் உதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனிநாக்கு, அடிநாக்கு, நடுநாக்கு இவற்றின் முயற்சியால் மட்டுமே ஒலிப்பதாக இருக்கும். தமிழ் மிகவும் மென்மையாக ஒலிக்கக்கூடிய மெல்லோசை மொழியாகவே உள்ளதால் எழுதவும் பேசவும் படிக்கவும் எளிமையானதாக உள்ளது.

## 3. தமிழ் புதிது :

தமிழ் மொழி என்றென்றும் புதிதாக உள்ளது. அதற்குக் காரணம் இன்று வளர்ந்து வரும் அறிவியல், கணினி ஆகிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய கலைச் சொற்கள் உருவாகிக் கொண்டே உள்ளன. அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று சொல்லும் அளவிற்கு அவற்றின் கலைச் சொற்கள் பெருகியுள்ளன. சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாகவும் தமிழ்மொழி விளங்குகிறது. இதிலிருந்து தமிழ் இனிது, எளிது, புதிது என்பதை அறியலாம்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores




## சொல்லக் கேட்டு எழுதுக

ஆசிரியர் சொற்களைச் சொல்லக்கேட்டு மாணவர்கள் எழுதுதல்.

1. இன்பத்தமிழ்
2. சுப்புரத்தினம்
3. பாவேந்தர்
4. செந்தமிழ்
5. உயிரினங்கள்
6. தொல்காப்பியம்
7. பன்னிரண்டு
8. அஃறிணை
9. ஆராய்ச்சியாளர்
10. கருவூலங்கள்

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல் நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

**1.** பழமொழியின் சிறப்பு ........................................................ சொல்வது

அ) விரிவாகச் ஆ) சுருங்கச்

இ) பழமையைச் ஈ) பல மொழிகளில் **[விடை: ஆ) சுருங்கச்]**

**2.** நோயற்ற வாழ்வைத் தருவது ........................................................ **[விடை: சுத்தம்]**

**3.** உடல் நலமே ................................................ அடிப்படை. **[விடை: உழைப்புக்கு]**

**4.** உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?

**[விடை: உணவு, உடை. உறைவிடம்]**

**5.** பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக. **[விடை: சுத்தம்]**

## பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக

**1. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.**

எங்கள் பள்ளியில் சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.

**2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னார்கள்.**

பெற்றோரிடம் அனுமதி கடிதம் வாங்கி வரச் சொன்னார்கள்.

## ஆய்ந்தறிக

**பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.**

S. **இனியன், எஸ். இனியன், ச. இனியன் -இவற்றுள் சரியானது எது? ஏன்?**

ச. இனியன்.
பெயரும் பெயரின் தலைப்பெழுத்தும் தமிழில்தான் இருக்க வேண்டும்.
பெயரைத் தமிழிலும் பெயரின் தலைப்பெழுத்தை ஆங்கிலத்திலும் எழுதுவது தவறு.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## கடிதம் எழுதுக

**விடுப்பு விண்ணப்பம்** ※

அனுப்புநர்

அ.பூங்கோதை
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி
அண்ணாநகர், சென்னை-40.

பெறுநர்

வகுப்பாசிரியர் அவர்கள்
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி
அண்ணாநகர், சென்னை-40.

மதிப்பிற்குரிய ஐயா/ அம்மா,

வணக்கம், எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இரண்டு நாள்கள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள மாணவி,
அ.பூங்கோதை

இடம் : முகப்பேர்
நாள் : 18.06.2018
பெற்றோர் கையொப்பம்
அருணாச்சலம்.



## மொழியோடு விளையாடு

**திரட்டுக :**

**மை என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

| | | | |
|---|---|---|---|
| 1 | கருமை | 8 | வறுமை |
| 2 | இனிமை | 9 | தனிமை |
| 3 | பொறுமை | 10 | உவமை |
| 4 | பெருமை | 11 | அருமை |
| 5 | இளமை | 12 | உண்மை |
| 6 | சிறுமை | 13 | இல்லாமை |
| 7 | கல்லாமை | 14 | பன்மை |

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## சொல் வளம் பெறுவோம்

**1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

(எ.கா.) கரும்பு – கரு, கம்பு
கவிதை – கவி, விதை, கதை, தை
பதிற்றுப்பத்து – பதி, பத்து, பற்று
பரிபாடல் – பரி, பாடல், பா, பால், பாரி

**2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

**நூல் மொழி கோல் மீன் நீதி எழுது**
**கண் வெளி தமிழ் மணி மாலை விண்**

(எ.கா) விண்மீன்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்மீன் | 7 | தமிழ்மணி |
| 2 | மொழிநூல் | 8 | மீன்கண் |
| 3 | தமிழ்மொழி | 9 | தமிழ்மாலை |
| 4 | எழுதுகோல் | 10 | தமிழ்நூல் |
| 5 | கண்மணி | 11 | விண்வெளி |
| 6 | நீதிநூல் | 12 | மணிமாலை |

## பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக

**அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, அன்பு**

அ – ________ தருவது தமிழ்
ஆ – ________ தருவது தமிழ்
இ – ________ தருவது தமிழ்
ஈ – ________ இல்லாதது தமிழ்
உ – ________ தருவது தமிழ்
ஊ – ________ தருவது தமிழ்
எ – ________ வேண்டும் தமிழ்
ஏ – ________ தருவது தமிழ்

<u>அன்பு</u> தருவது தமிழ்
<u>ஆற்றல்</u> தருவது தமிழ்
<u>இன்பம்</u> தருவது தமிழ்
<u>ஈடு</u> இல்லாதது தமிழ்
<u>உவகை</u> தருவது தமிழ்
<u>ஊக்கம்</u> தருவது தமிழ்
<u>என்றும்</u> வேண்டும் தமிழ்
<u>ஏற்றம்</u> தருவது தமிழ்

## கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | க |
| ர | ம் | தா | ர | சு | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | பா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

1. ________
2. ________
3. ________
4. ________
5. ________

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


விடை : 1. பாரதிதாசன் 2. பாரதியார்
3. திருவள்ளுவர் 4. வாணிதாசன்
5. சுரதா 6. ஔவையார்

## நிற்க அதற்குத் தக

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்.
2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.
3. தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. வலஞ்சுழி | - Clock wise | 2. இடஞ்சுழி | - Anti Clock wise |
| 3. இணையம் | - Internet | 4. குரல்தேடல் | - Voice Search |
| 5. தேடுபொறி | - Search engine | 6. தொடுதிரை | - Touch Screen |
| 7. முகநூல் | - Facebook | 8. செயலி | - App |
| 9. புலனம் | - Whatapp | 10. மின்னஞ்சல் | - E-mail |

## கூடுதல் வினாக்கள்

**1. இலக்கணம் என்றால் என்ன?**

(i) உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதன் உற்று நோக்கினான். அவற்றின் இயல்புகளை அறிந்துகொண்டான் இவ்வாறே மொழியையும் ஆழ்ந்து கவனித்தான்.

(ii) மொழியை எவ்வாறு பேசவும், எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்தான். அந்த வரையறைகளே இலக்கணம் எனப்படும்.

**2. தமிழ்மொழியின் இலக்கண வகைகள் எத்தனை வகைப்படும்?** ※

தமிழ்மொழியின் இலக்கண வகைகள் ஐந்து வகைப்படும்.

**3. தமிழ் மொழியின் இலக்கண வகைகள் யாவை?**

(i) எழுத்து இலக்கணம்
(ii) சொல் இலக்கணம்
(iii) பொருள் இலக்கணம்
(iv) யாப்பு இலக்கணம்
(v) அணி இலக்கணம்

**4. எழுத்து என்றால் என்ன?**

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும், வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

**5. உயிர் எழுத்துகள் என்றால் என்ன?**

உயிருக்கு முதன்மையானது காற்று. காற்றைப் பயன்படுத்தி வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளினால் வெளிப்படும் “அ முதல் ஔ வரை” உள்ள எழுத்துகள் உயிர் எழுத்துகள் எனப்படும்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**6. உயிர் எழுத்துகள் எத்தனை அவற்றை எடுத்து எழுதுக.**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. அவை – அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகும்.

**7. குறில் எழுத்துக்கள் என்றால் என்ன?**

குறுகி ஒலிக்கும் எழுத்துகள் குறில் எழுத்துகள் எனப்படும்.

**8. நெடில் எழுத்துகள் என்றால் என்ன?**

நீண்டு ஒலிக்கும் எழுத்துகள் நெடில் எழுத்துகள் எனப்படும்.

**9. உயிர்க் குறில் எழுத்துக்களை எழுதுக.**

அ, இ, உ, எ, ஒ என ஐந்து எழுத்துகளும் உயிர்க்குறில் எழுத்துகளாகும்.

**10. உயிர் நெடில் எழுத்துகள் யாது?**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழு எழுத்துகளும் உயிர் நெடில் எழுத்துகளாகும்.

**11. மெய் எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?**

(i) மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது.

(ii) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.

**12. மெய்யெழுத்துகள் எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகிறது? அவை யாவை?**

மெய் எழுத்துக்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

அவை 1. வல்லினம், 2. மெல்லினம், 3. இடையினம் ஆகும்.

**13. வல்லினம் என்றால் என்ன? அவை யாவை?**

வன்மையாக ஒலிக்கும் எழுத்துகள் வல்லினம் எனப்படும்.

அவை – க், ச், ட், த், ப், ற்

**14. மெல்லினம் என்றால் என்ன? அவை யாவை?**

மென்மையாக ஒலிக்கும் எழுத்துகள் மெல்லினம் எனப்படும்.

அவை – ங், ஞ், ண், ந், ம், ன்

**15. இடையினம் என்றால் என்ன? அவை யாவை?**

வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்ற எழுத்துகள் இடையினம் எனப்படும்.

அவை – ய், ர், ல், வ், ழ், ள்

**16. மாத்திரை என்பது யாது?**

மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ, ஒருமுறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவு ஆகும்.

☆ ☆ ☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ..................... ஆக இருக்கும்.
அ) மகிழ்ச்சி ஆ) கோபம்
இ) வருத்தம் ஈ) அசதி

2. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...............
அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

3. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் .....................
அ) புதுமை ஆ) பழமை
இ) பெருமை ஈ) சீர்மை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. ஏற்றத் தாழ்வற்ற ................... அமைய வேண்டும்.
5. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ............... சுருங்கி விட்டது.
6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் ..............

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. சமூகம் - விளைச்சல்
8. விளைவு - கடல்
9. மேதினி - மக்கள் குழு
10. ஆழி - உலகம்

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. நாள்தோறும் -
12. அடிப்படை -

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
14. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
15. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
16. மாத்திரை என்பது யாது?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. தமிழ்க்கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.
18. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?
19. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீ எவற்றைக் கருதுகிறாய்?

**VI. அடிமாறாமல் எழுதுக.** 4

20. 'இன்பத் தமிழ்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆☆☆

www.surabooks.com